விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, புரட்டாசி - 2 சனி 18.09.2021 மலர் - 2, இதழ் - 165

# சஞ்சீவினி சாரதா கேந்திரா



விஜயபாரதம்

காஷ்மீரின் போஹ்ரி ஆனந்த நகரில் உள்ள சஞ்சீவனி சாரதா கேந்திரா வளாகத்தில், சாரதா அஷ்டமி தினத்தையொட்டி ‘சஞ்சீவனி சாரதா கேந்திரா’வின் நிறுவன தின விழா நடைபெற்றது. காஷ்மீர் ஹிந்துக்களின் தியாகிகள் தினமும் அதில் அனுசரிக்கப்பட்டது. இதில், சாரதா லிபி கற்றல் படிப்பை ஊக்குவிக்க ஹரியானாவின் விஸ்வகர்மா திறன் பல்கலைக்கழகம் மற்றும் சஞ்சீவனி சாரதா கேந்திரா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. விஸ்வகர்மா திறன் மேம்பாட்டு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ராஜ் நேரு இந்நிகழ்வில் தலைமையேற்று பேசுகையில், ‘காஷ்மீர் நாகரிகம், புதுமை, அறிவியல், தொழில்நுட்பத்தின் தொட்டில், ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க இளைய தலைமுறையினரிடையே உண்மையான, உயர் சிந்தனை, தார்மீக கல்வி, புதிய சிந்தனை செயல்முறைகளை வளர்ப்பதே காலத்தின் தேவை’ என்று கூறினார். இந்நிகழ்வில், சாரதா லிபி படிப்பை முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. காஷ்மீர ஹிந்து இளைஞர்களை தாய்நாடு மற்றும் சமூகத்திற்காக தங்கள் பங்களிப்பை அளித்து சேவை செய்ய ‘காஷ்யப் பூமியின் சேவைக்காக இளைஞர்கள்’ என்ற இயக்கம் தொடங்கப்பட்டது. பல்வேறு போட்டிகளில் பங்கேற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# மன்னார்குடியில் என்.ஐ.ஏ




விஜயபாரதம்

பாவா பக்ருதீன் என்ற நபர், மன்னார்குடியில் உள்ள ஆசாத் தெருவில், 4 ஆண்டுகளுக்கும் மேலாக வசிக்கிறார். தஞ்சாவூரில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் இவர், முகமது இக்பால் என்பவர் தொடர்புடைய 721 என்ற குற்ற எண் கொண்ட ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார். மேலும், இவர் பாரதத்தில் தடை செய்யப்பட்ட முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் சிலவற்றுடன் தொடர்பில் இருந்துள்ளார். இதனையடுத்து, சென்னையில் இருந்து மன்னார்குடிக்கு சென்ற தேசிய புலனாய்வு அதிகாரிகள், பாவா பக்ருதீனை கைது செய்தனர். அவரது வீட்டை சோதனையிட்டனர். அவரிடம் 6 மணி நேரம் தொடர்ந்து விசாரணை நடத்திய என்.ஐ.ஏ அமைப்பினர், அங்கு கைப்பற்றப்பட்ட சில ஆவணங்களுடன், அவரையும் சென்னைக்கு அழைத்துச் சென்றனர்.

# பிரதமர் பெற்ற பரிசுகள் ஏலம்


விஜயபாரதம்

பிரதமர் நரேந்திர மோடி பெற்ற பரிசுகள் மற்றும் நினைவுப் பொருட்களை, மின்னணு ஏலத்தில் விடும் நிகழ்ச்சியை மத்திய அரசின் கலாச்சாரத்துறை அமைச்சகம் நடத்துகிறது. அவ்வகையில், இவ்வருடம் பிரதமர் பெற்ற பரிசுகள் மற்றும் நினைவுப் பொருட்கள் நேற்று முதல் மின்னணு ஏலத்தில் விடப்படுகின்றன. இந்த நினைவுப் பரிசுகளில் ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்கள் அளித்த ஈட்டி, இறகுப்பந்து, கையெழுத்திட்ட சால்வை உள்ளிட்ட பல்வேறு பொருட்கள், அயோத்தி ராமர் கோயில், சர்தாம், ஆகியவற்றின் மாதிரிகள், சிற்பங்கள், ஓவியங்கள், அங்கவஸ்திரங்கள் உட்பட 1,300 பொருட்கள் ஏலம் விடப்படும். இந்த மின்னணு ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள், அமைப்புகள் https://pmmementos.gov.in என்ற இணையதளம் மூலம் நேற்று முதல் வரும் அக்டோபர் 7ம் தேதி வரை பங்கேற்க முடியும். இந்த மின்னணு ஏலம் மூலம் கிடைக்கும் பணம், கங்கை நதியை பாதுகாக்கும், புதுப்பிக்கும் 'நமாமி கங்கே' திட்டத்துக்கு வழங்கப்படும்.

# ஆசியாவின் முதல் விரைவுச் சாலை


விஜயபாரதம்

டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேசம், மும்பை ஆகிய மாநிலங்களை இணைக்கும் டெல்லி மும்பை விரைவுச் சாலைப் பணிகளின் முன்னேற்றத்தை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி சமீபத்தில் ஆய்வு செய்தார்.

1,380 கிலோமீட்டர் நீளமுள்ள டெல்லி மும்பை விரைவு சாலை 98,000 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு வருகிகிறது. இது பாரத்த்திலேயே மிக நீளமான விரைவுச் சாலை. டெல்லி மும்பை இடையே 12.5 மணி நேரத்தில் பயணிக்க முடியும். இச்சாலை பல்வேறு பொருளாதார மண்டலங்களின் இணைப்பை மேம்படுத்தும்.

பிரதமரின் ‘புதிய இந்தியா’ என்ற தொலைநோக்கு திட்டத்தின் கீழ், கடந்த 2019, மார்ச் 9ல் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்ட, இந்த சாலையால், 320 மில்லியன் லிட்டருக்கும் அதிகமான எரிபொருளை சேமிக்க முடியும், 850 மில்லியன் கிலோ கர்பன் உமிழ்வை குறைக்க முடியும். இச்சலை திட்டத்தின் ஒரு பகுதியாக, 20 லட்சத்திற்கும் அதிகமான மரங்கள், செடிகள் நடப்பட உள்ளன.

வன விலங்குகள் சாலையை கடக்க ஏதுவாக அவைகளுக்கான மேம்பாலங்களைக் கொண்ட ஆசியாவிலேயே முதன்மையானதும் உலகின் இரண்டாவது நெடுஞ்சாலையாக இது இருக்கும். இத்திட்டத்தால் ஆயிரக்கணக்கான பொறியாளர்கள், ஏராளமான பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துதுள்ளது. இச்சாலையில், பெட்ரோல் பங்குகள், மோட்டல்கள், ஓய்விடங்கள், ஹெலிபேட் உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் செய்யப்பட உள்ளன.

# வளர்ச்சியில் பாரதம் முதலிடம்



விஜயபாரதம்

ஐ. நா சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு கூட்டத்தில், ஆய்வறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் பாரதம், 2022ம் ஆண்டில் 6.7 சதவீதம் வளர்ச்சி பெறும். இதுவே, உலகின் மிக வேகமான வளர்ச்சியாக இருக்கும். சீனா 5.7 சதவீத வளர்ச்சியை பெற்று இரண்டாவது வளர்ச்சி பெரும் நாடாக இருக்கும் என குறிப்பிடப்பட்டு உள்ளது. எனினும், 2021ல் சீனாவின் வளர்ச்சி 8.3 சதவீதமாகவும் பாரதத்தின் வளர்ச்சி 27.2 சதவீதமாகவும் இருக்கும். உலகளவிலான ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 5.3 சதவீதமாக இருக்கும். இது, கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சியாக இருக்கும். ஒரு சில நாடுகள், 2019ல் இருந்த வளர்ச்சியை விட கூடுதல் வளர்ச்சியை காணும். இனி கொரோனா பாதிப்புகள் அதிகம் இருக்காது என கனக்கிட்டாலும், பல நாடுகள் கொரோனாவுக்கு முந்தைய வளர்ச்சியை மீண்டும் அடைய 2030ம் ஆண்டு வரைகூட ஆகலாம். தற்போதைய நிகழ்வு, 2வது உலகப் போருக்குப் பிந்தைய நிலையை ஓரளவு நினைவுபடுத்துவதாக உள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# கொரோனா ஆறுதல் செய்தி




விஜயபாரதம்

தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் என்.சி.டி.சி'யின் இயக்குநர் சுஜீத் சிங், ஒரு பிரபல தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், 'ஆரம்ப காலகட்டத்தில் கொரோனா எங்கள் கணிப்புகளையும் தாண்டி மிக வேகமாக வளர்ந்தது. எனினும் அடுத்த ஆறு மாதங்களில் அது, 'என்டமிக்' எனப்படும் ஒரு சிலருக்கு மட்டுமே அல்லது ஒரு சில பகுதிகளில் மட்டுமே உள்ள தொற்றாக மாறிவிடும். வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் தடுப்பூசி மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தடுப்பூசி போடப்பட்டவர்களும் கொரோனா வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். கேரளா தற்போது கொரோனா நெருக்கடியிலிருந்து மீண்டு வருகிறது. கொரோனா கிருமியின் புதிய மாறுபாடு வகைகள் எதுவும் பாரதத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. புதிய மாறுபாடுகள் வந்தாலும், தடுப்பூசி, இயற்கையாக உடலில் உருவான ஆன்டிபாடிகளால் அவைகளால் ஒரு பெரிய மூன்றாவது அலையை உருவாக்க முடியாது. எனினும், வருவது திருவிழா காலம் என்பதால் மக்கள் பாதுகாப்பாக இருப்பது அவசியம்' என தெரிவித்தார்.


# பயங்கரவாதிகள் கைது



விஜயபாரதம்

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. வங்க மொழி பேசக்கூடிய 15 பயங்கரவாத அமைப்பினரை உருவாக்கியுள்ளது. மும்பை தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதல்போல மீண்டும் பாரதத்தில் குண்டு வெடிப்பை நிகழ்த்த பயங்கரவாதிகளை ஐ.எஸ்.ஐ பயிற்றுவித்து வருகிறது. சமீபத்தில் டெல்லியில் 2 பயங்கரவாதிகள் பிடிபட்டனர். சீசேம், ஒசாமா என்ற பாகிஸ்தானின் இரண்டு பயங்கரவாதிகளிடம் இருந்து 1.5 கிலோ ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்து கைப்பற்றப்பட்டது. இவர்களிடம் உளவுத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் இவர்கள், ரயில்வே பாலங்களை தகர்க்க திட்டமிட்டனர். பல மாநிலங்களில் உள்ள ஸ்லீப்பர் செல்களுடன் இவர்கள் தொடர்பில் இருந்தனர். ஓமன் நாட்டை சேர்ந்தவர்கள் பாகிஸ்தானுக்கு கடல் மார்க்கமாக சென்று ஆயுதப் பயிற்சி பெறுகின்றனர் என்ற விவரங்கள் தெரியவந்தது.

# ஹர்ஷ் மந்தர் வீட்டில் சோதனை



விஜயபாரதம்

சமூக ஆர்வலர், தகவல் உரிமை சட்ட ஆர்வலர் என்ற போர்வையில் செயல்பட்ட ஹர்ஷ் மந்தர் என்பவர் செய்த நிதி முறைகேடுகள், பண மோசடி, எப்.சி.ஆர்.ஏ வெளிநாட்டு நிதி மோசடிகள் குறித்து சட்ட உரிமை கண்காணிப்பகம் என்ற அமைப்பு மத்திய உள்துறைக்கு பல்வேறு ஆதாரங்களுடன் புகார் அளித்தது. இதனையடுத்து அமலாக்கத்துறை, ஹர்ஷ் மந்தரால் நடத்தப்படும் தொண்டு அமைப்பு, ஈக்விட்டி ஸ்டடிஸ் மையம், இரண்டு சிறுவர் இல்லங்கள் உள்ளிட்ட இடங்களில் சோதனைகள் நடத்தியது.

நடிகர் சோனு சூட் கொரோனா பொதுமுடக்க காலத்தில் பலருக்கு உதவிகள் செய்தார், புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இலவச பேருந்துகளை ஏற்பாடு செய்தார் என்பதால் பரபரப்பாக பேசப்பட்டார். ஆனால், இவர் உதவியதாக கூறப்பட்ட பலர், அப்படி எந்த உதவியும் தங்களுக்கு கிடைக்கவில்லை என கூறியுள்ளனர். இவரின் பல நடவடிக்கைகள் சர்ச்சைக்கும் சந்தேகத்திற்கும் உரியதாகவே கருதப்படுகிறது. இந்நிலையில், நடிகர் சோனு சூட் வீடு, அவருக்கு தொடர்புடைய 6 இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

இந்த இரு சோதனைகளுக்கும் இடதுசாரிகள், அரவிந்த் கெஜ்ரிவால், மமதா பானர்ஜி, காங்கிரஸ், லிபரல் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் எதிர்ப்புத் தெரிவித்து உள்ளனர் என்பதால் இவர்களி இருவரின் பின்புலமும் ஆராயத்தக்கதே.


# வாராக்கடன் வங்கி



விஜயபாரதம்

வங்கிகளின் வாராக் கடன் வசூலுக்கு என்.ஏ.ஆர்.சி.எல்., என்ற அமைப்பை மத்திய அரசு ஏற்படுத்த உள்ளது. வங்கிகள் அவற்றின் வாராக் கடனை இந்த அமைப்பிடம் ஒப்படைத்து விடும். இதனால் வங்கிச் சேவைகள் மேம்படும். வாராக் கடனை வசூலிக்கும் இந்நிறுவனத்திற்கு 30 ஆயிரத்து 600 கோடி ரூபாய் வரை உத்தரவாதம் அளிக்கப்படும். வாராக் கடனில் 15 சதவீதம் ரொக்கமாக குறிப்பிட்ட வங்கிகளுக்கு வழங்கப்படும். எஞ்சிய 85 சதவீத கடனுக்கு, மத்திய அரசு உத்தரவாதத்துடன் கூடிய கடன் உறுதிப் பத்திரங்களை என்.ஏ.ஆர்.சி.எல் வழங்கும். கடன் வசூலிப்பில் ஏற்படும் இழப்பிற்கு இப்பத்திரங்கள் ஈடாக வங்கிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். கடந்த ஆறு ஆண்டுகளில் 5.01 லட்சம் கோடி வாராக் கடன்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி புதிய வாரியம்



விஜயபாரதம்

ஆந்திர அரசு திருமலை திருப்பதி தேவஸ்தானம், 81 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரிய 'ஜம்போ' வாரியத்தை அமைத்துள்ளது. வழக்கமான 24 வாரிய உறுப்பினர்கள், நான்கு அதிகாரப்பூர்வ உறுப்பினர்களுடன் சேர்த்து 52 சிறப்பு அழைப்பாளர்கள் இக்குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் மாமா ஒய்.வி சுப்பா ரெட்டியை இக்குழுவின் தலைவராக இரண்டாவது முறையாக அரசு நியமித்துள்ளது. புதுச்சேரியின் முன்னாள் அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ், ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் எம்.எல்.ஏ கடசானி ராமபூபால் ரெட்டி, தமிழக தி.மு.க எம்.எல்.ஏ ஏ.பி நந்தகுமார், கர்நாடக பா.ஜ.க எம்.எல்.ஏ எஸ்.ஆர் விஸ்வநாத் ரெட்டி, சிவசேனா செயலாளர் மிலிந்த் கேசவ் நர்வேக்கர், பி.சி.சி.ஐ முன்னாள் தலைவர் சீனிவாசன், ஆந்திர பிராமண நலக் கழகத் தலைவர் சுதாகர் ஆகியோர் இதில் இடம் பெற்றவர்களில் சிலர். வளர்ச்சிப் பணிகள், பல்வேறு துறைகளில் தேவைப்படும் நிர்வாக வசதிக்காக இந்த சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேவஸ்தானம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாலை திட்டங்கள்



விஜயபாரதம்

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, நேற்று மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் ரூ. 9,577 கோடி செலவில் 34 சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் நரேந்திர சிங் தோமர், ஜோதிராதித்ய சிந்தியா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த திட்டங்கள் மூலம் மாநிலம் முழுவதும் 1,356 கி.மீ சாலைகள் அமைக்கப்படும். இந்த பணிகளை நவம்பர் 2022 க்குள் முடிக்க காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# முழுமையடையாத மருத்துவமனைகள்



விஜயபாரதம்

டெல்லி, நஜாப்கரில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கடந்த 2014 முதல் கட்டடப்பட்டு வருகிறது. எனினும் முடிந்தபாடில்லை. இதனை விரைந்து கட்டி முடிக்கக் கோரி ராஜேஷ் கௌஷிக் என்பவர் தாக்கல் செய்த மனு, டெல்லி உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அதில், மத்திய அரசின் வழக்கறிஞர், 'அங்குள்ள மரங்களை இடமாற்றம் செய்ய மத்திய அரசு அனுமதி கேட்டு கெஜ்ரிவால் தலைமையிலான டெல்லி அரசுக்கு தொடர்ந்து பல கடிதங்கள் எழுதியது. எனினும் மாநில அரசு அதற்கு எந்த பதிலும் இதுவரை அளிக்கவில்லை. 80 சதவீத கட்டுமானப் பணிகள் ஏற்கனவே முடிந்துவிட்டன. டெல்லி அரசின் தாமதத்தால் பணிகள் நிலுவையில் உள்ளது' என தெரிவித்தார். இது குறித்து கருத்துத் தெரிவித்த நீதிபதிகள், 'டெல்லி அரசின் மந்தமான அணுகுமுறையால் பொதுமக்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. டெல்லி அரசு தேவையான ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும். நவம்பர் 8ல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்' என்று தெரிவித்தனர்.

# ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு



விஜயபாரதம்

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு தலைவர்கள் கவுன்சிலின் 21 வது கூட்டம் நேற்று, துஷான்பேவில் துவங்கியது. இக்கூட்டத்திற்கு தஜிகிஸ்தான் தலைவர் எமோமாலி ரஹ்மான் தலைமை தாங்கினார். பிரதமர் நரேந்திர மோடி, பாரதத் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார். அங்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், சீன வெளியுறவுத்துறை அமைச்சரை வாங் யியை சந்தித்து பேசினார். அப்போது, இரு நாடுகளும் எல்லையில் படைகளை குறைப்பது குறித்து விவாதித்தார். மேலும், ஆசிய ஒற்றுமையைப் பொறுத்தவரை, பாரதமும் சீனாவும் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும், இருதரப்பு உறவுகளின் வளர்ச்சிக்கு அடிப்படையான அமைதியை மீட்டெடுப்பது அவசியம் என்று கூறினார். மாநாட்டில் உரையாற்றிய மோடி, 'மத்திய ஆசியா, என்றும் மிதமான, முற்போக்கான கலாச்சாரங்கள், நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. தற்போது, இங்கு அமைதி, பாதுகாப்பு, நம்பிக்கை ஆகியவையே மூன்று முக்கியப் பற்றாக்குறைகளாக உள்ளன. மத்திய ஆசியாவுடனான தொடர்பை அதிகரிக்க பாரதம் உறுதிபூண்டுள்ளது. மத்திய ஆசிய நாடுகள் பாரதத்தின் பரந்த சந்தையுடன் இணைப்பதன் மூலம் பெரும் நன்மை அடைய முடியும். திறமையான இளைஞர்களை அறிவியல் சிந்தனையை நோக்கி ஊக்குவிக்க வேண்டும். வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் புதுமையான மனநிலையை உருவாக்க நாம் ஸ்டார்ட் அப், தொழில்முனைவோர்களை ஒன்றிணைக்க வேண்டும்' என்று கூறினார்.

# அமெரிக்க செனட்டர்கள் கடிதம்

அமெரிக்க செனட்டர்கள் வெளியுறவு செயலாளர் ஆண்டனி பிளிங்கனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அதில், தலிபான் அரசின் தற்போதைய பதிப்பு அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக உள்ளது. அதனால், தலிபான்களை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர். மேலும், ஆப்கானிஸ்தானின் உள்துறை அமைச்சராக சிராஜுதீன் ஹக்கானி நியமிக்கப்பட்டதற்கு தங்கள் கவலையை தெரிவித்தனர். ஆப்கனில் இருந்து அமெரிக்க ராணுவத்தை அவசரமாகத் திரும்பப் பெற்றதற்கு ஜோ பிடென் நிர்வாகத்தை செனட்டர்கள் விமர்சித்தனர்.

விஜயபாரதம்





# வலையில் சிக்கிய மீம்கள்





விஜயபாரதம்

# மதன்லால் திங்க்ரா

மதன்லால் திங்க்ராவின் இறுதி அறிக்கை இங்கிலாந்தில் இருந்து பாரதத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால், அன்றைய பாரத அரசு அதனைத் தடை செய்தது. "சவால்" எனும் தலைப்பில் வெளியான அந்த அறிக்கையில் சில:

அன்னியத் துப்பாக்கிகளால் அடக்கப்பட்டிருக்கும் ஒரு தேசமானது நிரந்தரப் போரில் ஈடுபட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். நிராயுதபாணிகளாக்கப்பட்ட ஒரு தேசத்துக்கு வெளிப்படையான யுத்தம் சாத்தியமில்லை. எனவே, நான் எதிர்பாராத நேரத்தில் தாக்கினேன்.

நான் கருணையை யாசிக்கப்போவதில்லை. உங்களுக்கு என் மீது எந்த அதிகாரமும் இல்லை. பாரதத்தை இங்கிலாந்து ஆள முடியாது; ஆளக்கூடாது. நான் அன்று ஆங்கில ரத்தத்தை சிந்த வைத்தேன். அது நான் என் பாரத தேசத்தின் தேசபக்த இளைஞர்களுக்கு தூக்குத் தண்டனை, நாடு கடத்தல் தண்டனைகளை அளித்து வந்தமைக்கான ஒரு எளிய பழிவாங்கும் முயற்சியே. இம்முயற்சியில் நான் என் மனசாட்சியைத் தவிர வேறு எவராலும் தூண்டப்படவில்லை. நான் என் கடமையை செய்தேன். எவருடனும் சதியாலோசனை செய்யவில்லை.

ஒரு ஹிந்து என்ற முறையில் என் தேசத்துக்கு இழைக்கப்பட்ட அவமானம் என் தெய்வத்துக்கு இழைக்கப்பட்ட அவமானம். என் தேசத்தாயின் சேவை ஸ்ரீராமனின் சேவை. அவளுக்கு செய்யப்படும் சேவை ஸ்ரீகிருஷ்ணனுக்குச் செய்யப்படும் சேவை. புத்தி பலத்திலும் உடல் பலத்திலும் சக்தியில்லாத என்னைப் போன்ற ஒரு மைந்தன் என் அன்னைக்கு என் உதிரத்தைத் தவிர வேறு எதைத் தந்துவிட இயலும்? எனவே என் ரத்தத்தை அவள் சந்நிதியில் நான் சமர்ப்பித்தேன்.

இறைவனிடம் என் ஒரே பிரார்த்தனை இதுதான். நான் என் தேசத்துக்காக மீண்டும் இதே தேச அன்னைக்குப் பிறப்பேனாக. மீண்டும் இதே புண்ணிய கைங்கரியத்தில் மரணத்தைத் தழுவுவேனாக. உலக மானுடம் அனைத்துக்கும் அவள் நன்மையை அருளவும், ஈஸ்வரனின் மகோன்னதத்தை பிரகடனப்படுத்தவும், அவள் விடுதலையை அடையும்வரை நான் மீண்டும் மீண்டும் பிறந்து இதே கைங்கரியத்துக்காக மரணத்தைத் தழுவுவேனாக. இன்று என் பாரத தேசம் படித்துக்கொள்ள வேண்டிய ஒரே பாடம் எப்படி தேசத்துக்காக மரணத்தை ஏற்றுக்கொள்வது என்பதுதான். அதனை கற்பிக்க ஒரே வழி, நாமே அந்தப் பாதையை ஏற்று வழிகாட்டுவதுதான். எனவே நான் மரணத்தை ஏற்றுக்கொள்கிறேன் அந்தப் பிராண தியாகத்தில் பிரகாசிக்கிறேன்.

**வந்தே மாதரம்.**

# கொரோனா மூன்றாவது அலையை தடுப்பது எப்படி.?

## அடிப்படையே ஆதாரம்



- பரிசோதனை, கண்டறிதல், சிகிச்சை அளித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டும்.
- புதிய நோயாளிகளை கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தவேண்டும்
- 5% மேல் நோய்த்தொற்று இருக்கும் பகுதிகளில் பொதுமுடக்கம் அறிவிக்க வேண்டும்

# கொரோனா மூன்றாவது அலையை தடுப்பது எப்படி.?

## பாதுகாப்பு நடைமுறைகளே முதல் தடுப்பூசி



- பாதுகாப்பு நடைமுறைகளை முறையாக பின்பற்றுவதே முதல் தடுப்பூசி.
- உங்கள் முகக்கவசத்தை தவறவிடாதீர்கள்
- எப்போழுதும் கைகளை சுத்தமாக வைத்திருங்கள், அவ்வப்பொழுது கிருமிநாசினியை பயன்படுத்தவும்
- எப்போழுதும் சமூக இடைவெளியை பயன்படுத்தவும்

## கொரோனா மூன்றாவது அலையை

# தடுப்பது எப்படி.?

### தடுப்பூசி




- அறிஞர்களின் கருத்துப்படி தடுப்பூசி செலுத்திக்கொள்வதே கொரோனாவுக்கு எதிரான சிறந்த ஆயுதம்
- தடுப்பூசி கையிருப்பு அதிகரித்து வருகிறது
- இன்னும் பல்வேறு நிறுவனங்கள் தயாரிக்கும் தடுப்பூசிகள் பயன்பாட்டுக்கு வரவுள்ளது

## கொரோனா மூன்றாவது அலையை

# தடுப்பது எப்படி.?

### மறந்துவிடாதீர்கள்




- கொரோனா பரவல் இன்னும் ஓயவில்லை. மீண்டும் ஒரு அலை வரவுள்ளது.
- முதல் அலையின் போது செய்த தவறுகளை இனியும் தொடராதீர்கள்.
- வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் கூட்டம் கூடுவதை தவிர்க்கவும்